அந்தக் குழந்தைகளை கவனிக்கின்ற பொறுப்பைப் பெண்களிடத்தில் ஒப்படைத்தால் தான் சிறப்பாக இருக்கும் என்கிற அடிப்படையில், பெண்கள் மீது மிகுந்த அன்பையும், பாசத்தையும் வைத்திருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அவ்வாறு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 53, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

திருமண உதவித் தொகையை அதிகரித்தல்.

53—

*23172—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அளிக்கும் திருமண உதவித் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் 25 மாநிலங்கள் இருக்கின்றன. அவற்றில் சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்யப்படுகிற ஒரே ஒரு மாநிலம், நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி செய்கிற இந்தப் புனித பூமியில் தாய்மார்களுக்கு அளிக்கப்படுகிற திருமண உதவித் தொகை அதிகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களை அளித்து வருகிறோம்.

மூவாலூர் இராமாமிர்தம் திட்டம்.
தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்.
விதவை மகள் திருமண உதவித் திட்டம்.
விதவை மறுமண உதவித் திட்டம்.
ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்.

1993 அக்டோபர் 28]

இதைப் போன ஆண்டுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலனை செய்து, ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு ரூ. 1,000 என்று இருந்ததை ரூ. 2,000ஆக உயர்த்திக்கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது இதை அதிகப்படுத்துவதற்குப் பரிசீலனை எதுவும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த திருமணத் திட்டத்திற்கு எவ்வளவு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது, இதனால் எவ்வளவு பேர் பயனடைந்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவாலூர் திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் அளிக்கிறோம். அதில் 10,000 பேர் பயனடைகிறார்கள். அதைப்போல தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தில் 600 பேருக்கு உதவி அளிக்கிறோம். இதற்கு 30 இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம். விதவை மகள் திருமண உதவித் திட்டத்தில் ஆயிரம் பேர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. விதவை மறுமணத் திட்டத்தில் 200 பேருக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தில் 100 பேருக்கு 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவற்றை அவர்கள் சுலபமாகப் பெறவேண்டும், ஏழைகள் பயனடைய வேண்டும் என்பதற்காகத் தான் மாண்புமிகு முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் 6,400 ரூபாயாக இருந்த வருமான வரம்பை 12,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. சொக்கலிங்கம்.

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை தான் திருமண உதவித் தொகையாக அரசால் அளிக்கப்படுவதாக அறிகிறேன். இதனால் என் தொகுதியைச் சேர்ந்த வீராணகுன்னம் கிராமத்தைச் சேர்ந்த ** இந்த நிதி சென்ற ஆண்டு கிடைக்கவில்லை. எனவே, அனைத்து தகுதியையும் பெற்று, திருமண உதவித்தொகைக்காக ஏங்குகிற புத்தம் புது தம்பதிகளுக்கு, மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியில் அனைவருக்கும் திருமண உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1993 அக்டோபர் 28

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**என்று இருக்கிறது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், ஒழுங்காக ஏழை மக்களுக்கு, ஏழைப் பெண்களுக்கு இந்த உதவித்தொகைப் போய்ச் சேருகிறது. அந்த வகையிலே பல்வேறு திருத்தங்களை மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரிய ஆலோசனையின் பேரில் சமூக நலத்துறை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியாக ரூபாய் வழங்குகிறார்கள். சமீப காலமாக இந்தத் திட்டத்தின்கீழ் மனுச் செய்த ஏழைப் பெண்களுக்கு நிதி உதவி கிடைக்கவில்லை என்று குறையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஏழைகள்பால் கருணை உள்ளம் கொண்ட, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களும், இந்தக் குறையை நீக்கி, உடனடியாக இந்தத் திருமண உதவி கோரிய ஏழைப் பெண்களுக்கு, திருமண நிதி உதவி கிடைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி 5 கோடி ரூபாயாகும். இதை முழுமையாக தமிழக அரசு செலவிடுகிறது. ஆகவே, இந்த 5 கோடி ரூபாயை வைத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறபோது, அந்த மாவட்டத்தில் எவ்வளவு விண்ணப்பங்கள் வருகின்றதோ, அதற்குரிய பணத்தில் அந்த விண்ணப்பங்கள் உடனடியாக கவனிக்கப்பட்டு, அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 அக்டோபர் 28]

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏழைப் பெண்களுக்கு வழங்கப் படுவதாகச் சொன்னார்கள். ஆனால் உண்மையிலே அப்படிப் பட்ட நிலை இல்லை. உண்மையிலே நிரூபிக்க வேண்டும் என்று சொன்னால், ஏழைப் பெண்களுக்கு அனுப்பிய மனுக்கள் பூராவும் திருப்பி அனுப்பப்படுகின்றன. யாருக்குக் கொடுக்கிறார்கள் என்று கூட தெரியவில்லை. நானும் வளர்ச்சி மன்றக் கூட்டத் திலே அப்படிக் கொடுக்கிறபோது, எங்களையும் கலந்துகொண்டு கொடுக்கலாம், இல்லாவிட்டால்கூட கொடுத்திருக்கிற பட்டியலை யாவது கொடுங்கள் என்று கோரியபிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒன்றியங்களுக்கு பட்டியலைத் தந்து சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவையுங்கள் என்று சொல்லியும் கூட, இன்னமும் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, உண்மை யிலேயே இதில், ஏழைகள் மனுக்கள் முழுவதுமே திருப்பி அனுப்பப் படுகின்றன. வேண்டுமானால், நான் அவ்வளவு மனுக்களையும் சேர்த்து, தங்களிடம் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன். அவர்களுக்கு வழங்க அமைச்சர் அவர்கள் தயாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப் பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார் கள். ஏழை மக்களுக்குத்தான் இந்த உதவித் தொகை போய்ச் சேருகிறது என்பதை மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று இந்த நிதி உதவித் தொகையைக் கொடுக்கிறபோது, அந்தப் பணத்தைப் பெறுகிற மக்களைப் பார்த்திருந்தாலே சட்ட மன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட தொகைக் குள்ளே வருகிற விண்ணப்பங்களுக்குத்தான் நாங்கள் கொடுக்க முடியும். அந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்து, ஏழைகளாகக் கொடுப்பவர்களில் மிகுந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு, விண்ணப்பங்கள் மூலமாக நிதி உதவி அளிக்கப் படுகிறது. கடந்த ஆட்சியிலே திருமண மண்டபங்களிலே கல் யாணம் செய்தவர்களுக்கும், நிரம்ப நகைகளைப் போட்டு வசதி படைத்தவர்களுக்கும், திருமணம் செய்தவர்களுக்கும் பணம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது அப்படி யில்லை. வீட்டிலேயே கோயிலிலே திருமணம் செய்யக்கூடிய அளவிற்கு கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பவர்களுக்குத்தான் இந் தத் திருமண உதவித் தொகையே வழங்கப்படுகிறது. குறிப் பிட்ட தொகை இருக்கிற காரணத்தாலே, அந்தக் குறிப்பிட்டத் தொகைக்குள்ளே வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.